பொதட்டூர்பேட்டையில் ஜவுளிப் பூங்கா அமைத்திடுவீர்!

திருத்தணியில் மகளிர் கலை - அறிவியல் கல்லூரி தொடங்கிடுவீர்!

சட்டபேரவையில் திருத்தணி எஸ்.சந்திரன் பேச்சு!

சென்னை, ஏப். 25- சட்டப்பேரவையில் போக்குவரத்து மற்றும் பத்திரப் பதிவுத் துறை மானியக் கோரிக்கையில் திருத்தணி தொகுதி உறுப்பினர் எஸ்.சந்திரன் பேசுகையில் திருத்தணியில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கலைக் கல்லூரி அமைத்திட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

சட்டபேரவையில் திருத்தணி எஸ்.சந்திரன் பேசியதாவது:

போக்குவரத்துத் துறை மானிய கோரிக்கையில் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த வாய்ப்பால் திருத்தணி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்த அவைக்கு முதல் நாள் வந்தபோது எண்ணிப் பார்த்தேன். இதோ இங்கே தானே காஞ்சித் தலைவன் பேரறிஞர் அண்ணா அவர்கள் அமர்ந்திருப்பார், இங்கேதானே கர்ம வீரர் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் அமர்ந்திருப்பார், திருவாரூர் தந்த நன்முத்து, தமிழர்களின் சொத்து அஞ்சுகத் தாயின் அருந்தவப் புதல்வர் ஓயாமல் உழைத்தவர் இங்கே ஒய்வெடுத்துக் கொண்டிருக்கிறார் என்று தன் கல்லறையில் பொன்மொழிகளால் பொறிக்க சொன்ன தலைவர் கலைஞர் அமர்ந்திருப்பார் என்று நினைத்து பார்த்தேன்.

இந்த மாபெரும் தலைவர்கள் கடமை ஆற்றிய இந்த அவையில் எங்களை போன்ற சாதாரண சாமானியர்களுக்கும் வாய்ப்பளித்த இந்தியாவின் சிறந்த முதல்வர், மாற்றுத் திறனாளிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் இட ஒதுக்கீடு சட்டத்தை நிறைவேற்றி இந்தியாவையே திரும்பி பார்க்க வைத்த தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) சட்டப் போராட்டத்தால் ஆதிக்க சக்திகளுக்கு எதிராக தமிழ்நாட்டின் உரிமைகளை நிலை நாட்டிவரும் திராவிட தலைவர், முதல்வர் அவர்களை வணங்குகிறேன்.

தமிழ்நாட்டை இந்தியாவின் விளையாட்டு தலைநகரமாக உருவாக்கி, மருத்துவம், கல்வி, விளையாட்டு என ஈர உள்ளத்துடன் உதவி வரும் நாட்டை காக்கும் கரங்கள், நாளைய தலைமுறைக்கு உரங்கள், ஆதிக்க சக்திகளுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கும் துணை முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். அவை முன்னவர் அவர்களை வணங்குகிறேன். அரசு கொறடா அவர்களை வணங்குகிறேன்.

உன்னுடைய பணபலம் என்ன? பின்புலம் என்ன? என்று கேட்காமல் உன்னுடைய உழைப்பு என்ன? என்று கேட்டு வாய்ப்பளிக்கும் இயக்கத்தை திராவிட முன்னேற்ற கழகத்தை வணங்குகிறேன். என்னை வெற்றி பெற வைத்த, உலகத்திற்கு விழிப்பினை காட்டும் உதய சூரியன் சின்னத்தை வணங்குகிறேன். திருத்தணி தொகுதிக்கு என்னை முதல் திராவிட முன்னேற்ற கழக சட்டமன்ற உறுப்பினராக உதய சூரியன் சின்னத்தில் தேர்வு செய்த தொகுதி மக்களுக்கும், உழைத்திட்ட ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக செயலாளர்களுக்கும், முன்னேடிகளுக்கும், கூட்டணி கட்சி நண்பர்களுக்கும் நன்றித் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருத்தணியில் இருந்து திருச்செந்தூருக்கு பேருந்து!

போக்குவரத்துத் துறை மானிய கோரிக்கையில் தமிழ் கடவுள் முருகனின் 5 ஆம் படை வீட்டிலிருந்து பேச வாய்ப்பளித்தமைக்கு மீண்டும் ஒரு முறை நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த கால ஆட்சியில் சுவாசத்திற்கே போராடிய போக்குவரத்து துறையை ஆக்ஸிஜன் செலுத்தி விடியல் பயணம் உள்ளிட்டத் திட்டங்களை நிறைவேற்றிய முதல்வருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

போக்குவரத்துத் துறை அமைச்சரிடம் திருத்தணி-நெல்லை விரைவு பேருந்தை திருச்செந்தூர் வரை நீட்டிக்க வேண்டுமென கோரிக்கை வைத்து அதனை உடனடியாக நிறைவேற்றியமைக்காக எங்கள் பகுதியில் வசிக்கும் தென்மாவட்ட மக்கள் சார்பாக, போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நெஞ்சார நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) திருத்தணி தொகுதிக்கு ஒரு புதிய வழித்தடம், 10 புதிய பேருந்துகள் வழங்கியமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நேரத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சரிடம் ஒரு சில கோரிக்கைகள் வைக்க விரும்புகின்றேன். திருத்தணி-சென்னைக்கு ஒரு புதிய AC குளிர்சாதன பேருந்து வழங்கிடவும், ஏற்கெனவே திருத்தணி தொகுதியில் கிராமப்புறங்களில் செல்லும் பேருந்து

களை சில இடங்களில் பொதுமக்கள் கோரிக்கை ஏற்ப ½ கிலோமீட்டர், 1 கிலோமீட்டர் வழித்தடம் நீட்டிப்பு செய்து தர இந்த நேரத்தில் கோருகிறேன்.

அதேபோன்று திருத்தணி சட்டப்பேரவை தொகுதியில் இஸ்லாம் நகர், சானூர் மல்லாவரம், சிவாடா கொண்டாபுரம் வழித்தடங்களில் பேருந்துகளை புதிதாக இயக்க இந்த நேரத்தில் உங்களைக் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோன்று பொதட்டூர் பேட்டை, பணிமனை தலைவர் கலைஞருடைய ஆட்சிக் காலத்தில் துவங்கப்பட்ட பணிமனை. ஆனால் அது முறையாக தரைதளம் இல்லாமல், சுற்றுச்சுவர் இல்லாமல், DIESEL TANK இல்லாமல், COLLECTION POINT இல்லாமல் செயல்பாட்டிற்கு முழுமையாக வரவில்லை. அந்தப் பணிமனையை முழுமையாக...

செயல்படுத்திட இந்த நேரத்தில் தங்களைக் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோன்று திருத்தணி பணிமனை தரைதளம் இல்லாமல் இருக்கின்றது. அந்த தரை தளத்தை சீரமைத்து HI-TECH பணிமனையாக மாற்றித்தர கோருகின்றேன். சோளிங்கர் பணிமனையும் தரைதளம் இல்லாமல் அது. . .

அதனையும் தாங்கள் சீரமைத்து பணிமனையும் முழுமைப்படுத்தி தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று திருவள்ளூரை பொறுத்தவரை கழக ஆட்சியில் தனி மண்டலமாக போக்குவரத்துத் துறைக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் அதற்கு உண்டான அதிகாரங்கள் இன்னும் முழுமையாக கிடைக்காத காரணத்தால். . .

அதற்கான அனைத்து கோப்புகளும் கையாளும் வகையில் அதனை தனி கட்டடத்துடன் மேம்படுத்தித்தர போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று கடினமாக உழைக்கும் போக்குவரத்து ஓட்டுநர், நடத்துநர், தொழில்நுட்பப் பணியாளர்கள் சிறு, சிறு தவறுகள் நிகழ்யும்போது கடுமையான நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். இவர்களின்மீதான நடவடிக்கைகளை ஒரு முறை பரிசீலனை செய்து நடவடிக்கை இன்றி செய்திட தங்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று ஓட்டுநர், நடத்துநர் அவர்களிடத்தில் இரண்டு LICENCE இருந்தால்தான் வேலைக்கு APPLY செய்ய முடியும் என்கின்ற அரசாணை உள்ளது. இதனை மாற்றி ஓட்டுநர், நடத்துநர் தனித்தனியாக LICENCE எடுக்க ஆவன செய்ய இந்த நேரத்தில் தங்களை அன்புடன் நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும், தேடுங்கள் கிடைக்கும் என்றார் இயேசுபிரான். ஆனால், தட்டாமலே, கேட்காமலே, தேடாமலே மக்கள் நலத் திட்டங்கள் நிறைவேற்றப்படும் ஆட்சி தலைவர் தளபதி திராவிட மாடல் நாயகருடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

எனவே, கழக ஆட்சியில் கைரிக்க்ஷா ஒழிப்பு, இலவச கண்ணொளி திட்டம், நமக்கு நாமே, சமத்துவபுரம், விடியல் பயணம், காலை சிற்றுண்டி, மகளிர் உரிமைத்தொகை, இல்லம் தேடி கல்வி, மக்களைத் தேடி மருத்துவம் என ஏராளமான திட்டங்கள். இது போன்று, சொன்னதை மட்டுமல்ல, சொல்லாததையும் செய்திட்ட திராவிட நாயகரின் ஆட்சி இந்த ஆட்சி. விஞ்ஞானத்திற்கே சவால்விடும் தஞ்சை பெரிய கோயிலை கட்டிய தமிழர்களுடைய ஆட்சி அல்லவா இந்த ஆட்சி! கடல் அலைகளுடன் போட்டியிடும் வான் புகழ் வள்ளுவனுக்கு சிலை, வள்ளுவர் சிலை- விவேகானந்தர் மண்டபம் இடையில் கண்ணாடி இழை பாலம் என சாதனை தொடர்கிறது. எப்போதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி வருகிறதோ, அப்போதெல்லாம் தமிழ்நாடு 20 ஆண்டுகள் முன்னோக்கிச் செல்கிறது. கடந்த காலங்களில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, எதிர்க்கட்சிகள் ஆட்சி செய்கிறபோது, நாடு 10 ஆண்டுகள் பின்னோக்கி சென்றது அனைவருக்கும் தெரிந்த ஒன்று. இந்த நல்லாட்சிக்கு உதாரணம், தமிழ்நாடு முதல்வர் அவர்களிடம் சென்ற வாரம் திருத்தணி சட்டமன்றத் தொகுதிக்கு ஜவுளிப் பூங்கா கேட்டு கோரிக்கை மனு கொடுத்தேன். இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்னால், அரசு செயலாளரிடமிருந்து வழிக்காட்டுதல் பதில் உடனடியாக கிடைக்கப்பெறுகிறது. எங்களுடைய திருத்தணி சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரையில் நீண்ட நெடுங்காலம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும், அவர்களுடைய கூட்டணி கட்சியினரும் சட்டப் பேரவையிலே உறுப்பினர்களாக பணியாற்றிய ஒரு சட்டமன்றத் தொகுதி.

நான் சட்டமன்ற உறுப்பினராக திருத்தணி தொகுதிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பின், இவர்களெல்லாம் பல்வேறு பணிகளைச் செய்திருப்பார்கள், நமக்கு பணி குறைவாகத்தான் இருக்கும் என்று எண்ணி தொகுதியை சுற்றி வந்தபோது தான் தெரிந்தது, எந்தக் கிராமத்திலும், பேரூரிலும், நகரத்திலும் இவர்கள் எந்தவித அடிப்படை பிரச்சினைகளையும் தீர்க்கவில்லை என்று தெரிந்தது. அப்போதுதான் தலைவர் கலைஞர் அவர்களுடைய பாலைவன ரோஜாக்கள் திரைப்பட வசனங்கள் நினைவுக்கு வந்தது. தோண்டாத கிணறு, போடாத சாலை, குளம் போன்ற கால்வாய் என பட்டியல்கள் நீளமாகச் சென்று கொண்டே இருக்கின்றன. இது திருத்தணி தொகுதியில் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் இப்படிப்பட்ட நிலைதான் நிலவியது. தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய நிதியை ஒன்றிய அரசின் துணையுடனும், ஒன்றிய அரசும் முடிக்கிப் பார்த்தார்கள். யாரிடம்! நமது முதல்வர் அவர்களிடமா! தடைக் கற்களை எல்லாம் படிக் கற்களாக மாற்றி சாதனை படைத்து தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் ஏற்றி விடுகிறார் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். எல்லா சாலைகளும் ரோம் நோக்கி என்பதைப்போல, இந்தியாவின் எல்லா சாலைகளும் இன்றைக்கு தமிழ்நாட்டை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டப் போராட்டத்தால் தமிழ்நாட்டின் உரிமைகளை நிலைநாட்டும் இவரைப் பார்த்து ஏற்கெனவே சொன்ன மொழிகளைப் பொறுத்தவரையில் THALAPATHI, MORE DANGEROUS THAN KALAIGNAR என்று இன்றைக்கு ஒன்றியத்தில் உள்ளவர்கள் எல்லாம் உறைந்திருக்கிறார்கள் இந்தச் சட்டப் போராட்டத்தை பார்த்து. இதோ திட்டங்கள் என்று மாநகரங்கள், நகரங்கள், சிற்றூர், பேரூர், கிராமங்கள் என்று கொடுத்திட்ட இந்த ஆட்சியையும், முதல்வர் அவர்களையும் தமிழக மக்கள், குறிப்பாக தாய்மார்கள் நாங்கள் இருக்கின்றோம் என்று உயர்த்தி பிடித்துக் கொண்டுள்ளனர். நீங்கள் கூட்டணி கணக்கை போட்டுக்கொண்டு இருக்கிறீர்கள். முதல்வர் அவர்களோ வாக்களிக்கும் மக்கள் கூட்டணியுடன் வலுவாக இருக்கிறார். அதனால்தான் அறிவுலக மேதை அண்ணா அன்றே சொன்னார், மக்கள் தீர்பே மகேசன் தீர்ப்பு என்று.

திருத்தணி சட்டமன்றத் தொகுதியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களுக்கு இந்த நேரத்தில் நான் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், துறை சார்ந்த அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

திருத்தணி புறவழிச்சாலை!

முதலாவதாக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கிடப்பில் போடப்பட்ட திருத்தணி BYPASS புறவழிச் சாலை, அதை கழக ஆட்சியில் முடித்து தந்த தலைவர் அவர்களுக்கும், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கிடப்பில் போடப்பட்ட நகர்ப்புர வாழ்வாதார அடுக்குமாடி குடியிருப்புப் பணிகளை முடித்துக் கொடுத்த கழக ஆட்சிக்கும், தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கிடப்பில் போடப்பட்ட திருத்தணி நகருக்கான கூட்டு குடிநீர் திட்டத்தை கழக ஆட்சியில் நிறைவேற்றித் தந்த தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, திருத்தணியில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை ரூ.47 கோடியில் கட்டப்பட்டு, அண்மையில் அதைத் திறந்து வைத்த முதல்வர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முன்னாள் குடியரசுத் தலைவர் சர்வபள்ளி டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களுக்கு சிலை அமைக்க உத்தரவு பிறப்பித்த தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அண்மையில் நடந்த நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கையில் பள்ளிப்பட்டு புறவழிச்சாலைக்கு அறிவிப்பு கொடுத்த பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொகுதி முழுவதும் தரை பாலங்கள் அனைத்தும் உயர்மட்ட பாலங்களாக உயர்ந்திருக்கின்றன. பொதுப் பணித் துறை மூலமாக கட்டடங்கள், நெடுஞ்சாலைத் துறை மூலமாக சாலைகள், முதல்வரின் கிராமப்புற சாலைகள், அதேபோன்று இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் சார்பில் இராஜகோபுரம், அண்மையில் நடந்த இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை மானியக் கோரிக்கையில் திருத்தணி முருகன் கோயிலுக்கு மாற்று மலை பாதை அறிவிப்பைக் கொடுத்த அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருத்தணி நகராட்சிக்கான பணிகளையெல்லாம் நிறைவேற்றிக் கொடுத்த நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். பள்ளி கட்டடங்கள், வேளாண் கட்டடங்கள், நீர்வளத் துறைப் பணிகள், திருத்தணி மலைக் கோயிலுக்கான பணிகள் எனப் பல்வேறு பணிகளை செய்து கொடுத்த அமைச்சர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கொல்லாலகுப்பத்தில் அணைக்கட்டு!

இந்த நேரத்திலே என்னுடைய தொகுதி சார்ந்த ஒரு சில கோரிக்கைகளை மட்டும் இங்கு வைக்கின்றேன். பொதட்டூர்பேட்டையில் ஒரு ஜவுளி பூங்கா அமைத்துதர கோருகின்றேன். பள்ளிப்பட்டில் மகளிர் கல்லூரி அமைத்திடவும், பள்ளிபட்டு கொல்லாலகுப்பத்தில் அணைக்கட்டு அமைத்திடவும், இரா.கி.பேட்டையில் SIPCOT அமைத்திடவும், இரா.கி.பேட்டையில் போக்குவரத்து பணிமனை அமைத்திடவும், அம்மையார்குப்பத்திற்கு புறவழிச்சாலை அமைத்திடவும், விடியங்காட்டில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திடவும், பொதட்டூர்பேட்டை பணிமனையை முழுமையாக பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், இரா.கி.பேட்டைக்கு புதிய புறவழிச்சாலை அமைத்திடவும், திருத்தணி நகரை சுற்றி புதிய சுற்று வட்டப் பாதை அமைத்திடவும், திருத்தணி நகரில் ரெட்டி குளத்தை சுற்றி நடைபாதையுடன்கூடிய பூங்கா அமைத்திடவும், திருத்தணி அருள்மிகு சுப்ரமணிய சுவாமி கலைக் கல்லூரியில் புதிய கலை அரங்கம் அமைத்துத் தரவும், திருத்தணி காவல் நிலையத்தை K.G. கண்டிகையை தலைமையிடமாகக் கொண்டு புறக்காவல் நிலையம் ஒன்று அமைக்கவும், திருத்தணி முருகர் கோயிலுக்கு யானை ஒன்று வழங்கிடவும், பீரகுப்பம் ஆரம்ப சுகாதார நிலையத்தை தாலுகா மருத்துவமனையாக தரம் உயர்த்திடவும், பள்ளிப்பட்டு பேரூராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத்தரவும், பள்ளிப்பட்டு ராமசமுத்திரத்தில் துணை மின் நிலையம் அமைத்துத் தரவும், திருத்தணி ஒன்றியம், சின்ன கடம்பூரில் துணை மின் நிலையம் அமைத்துத் தரவும், திருத்தணி இராதாகிருஷ்ணன் அரசினர் ஆண்கள் மேல்நிலை பள்ளியில் கூடுதல் கட்டடம், ஆய்வகங்கள் அமைத்துத் தரவும், திருத்தணி ஒன்றியம் சீனிவாசபுரம், பள்ளிபட்டு குமாரராஜீபேட்டை, R.K.பேட்டை, புத்தேரி ஆகிய இடங்களில் உள்ள பள்ளிகளை தரம் உயர்த்தி தரவும், வங்கனூர் ஸ்ரீகாளிகாபுரம் பள்ளிகளை ஆண்கள், பெண்கள் என பிரித்துத் தரவும், திருத்தணி ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் அமைத்துதரவும், திருத்தணி ஒன்றியத்தில் வேளாண் விலைபொருட்களை சேமித்து வைக்கும் நோக்கில் குளிர்சாதன கிடங்கு அமைத்துதரவும், பள்ளிப்பட்டு பேரூராட்சியில் சாலைகள், மழைநீர் வடிகால் அமைத்திடவும், திருத்தணி நகரை சுற்றுலா நகரமாக அமைத்திடவும், திருத்தணி நகரம் காந்தி ரோடு நல்ல தண்ணீர் குளத்தில் படகுத் துறை அமைத்திடவும், இரா.கி.பேட்டையில் கருவூலம் அமைத்திடவும், நெடுஞ்சாலை துறைமூலம் அம்மையார்குப்பம், MINI PONDICHERRY, ராஜா நகரம் ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால்கள் அமைத்திடவும், திருத்தணி தொகுதியில் வேளாண் கல்லூரி, செவிலியர் கல்லூரி அமைத்திடவும், வட எல்லை போராட்ட வீரர் மங்கலங்கிழாருக்கு சிலை வைக்கவும், திருத்தணி வீர அட்டகேஸ்வரர் கோயிலுக்கு முன்புறம் சாலை வசதியும், கரிம்பேடு நாதபுரீஸ்வரர் கோயிலுக்கு அன்னதானம் திட்டத்தை செயல்படுத்திடவும், அம்மையார் குப்பத்தில் KCC வங்கி கிளையினை அமைத்திடவும், துறை சார்ந்த என்னுடைய தொகுதியின் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக கேட்டு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

இவ்வாறு திருத்தணி சந்திரன் பேசினார்.

மாதவரம் தெற்கு பகுதி புழல் 24வது வட்ட தி.மு.க. சார்பில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நீர் மோர் பந்தல் புழல் அம்பேத்கர் சிலை அருகில் மாதவரம் தெற்கு பகுதி தி.மு.க. இளைஞரணி துணை அமைப்பாளர் ஏ.வி.ஆர். அருண் ஏற்பாட்டில் நடைபெற்றது. வட்டச் செயலாளர் கே.பி.சுந்தரேசன் தலைமை தாங்கினார். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி. மதன் குமார், மாவட்ட துணை துணை அமைப்பாளர்கள் எஸ்.டி.சீனிவாசன் , ஜி.கே. இனியன் பகுதி அமைப்பாளர் வினோத் முன்னிலை வகித்தனர். சென்னை வட வடகிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.சுதர்சனம், எம்.எல்.ஏ. கலந்துகொண்டு நீர் மோர், பந்தலை திறந்து வைத்து ஆயிரம் பேருக்கு மோர், தர்பூசணி, வெள்ளரிக்காய் இளநீர், கிர்ணி பழம் உள்ளிட்ட பல்வேறு பழங்களை பொதுமக்களுக்கு வழங்கினார். விழாவில் மாதவரம் தெற்கு பகுதி செயலாளர் மாதவரம் ஜி.துக்காராம் மற்றும் பகுதி, வட்ட பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அடையாறு ஆற்றங்கரையைக் கடக்கக்கூடிய

தரைப்பாலம் மீண்டும் அமைத்துத் தரப்படுமா?

பேரவையில் விருகம்பாக்கம் எ.எம்.வி.பிரபாகரராஜா கேள்வி!

சென்னை, ஏப். 25- சட்டப் பேரவையில் விருகம்பாக்கம் தொகுதி உறுப்பினர் எ.எம்.வி.பிரபாகரராஜா கேட்ட கேள்வியும் அமைச்சர் எ.வ.வேலு அளித்த பதிலும் வருமாறு:-

எ.எம்.வி. பிரபாகரராஜா: நெடுஞ்சாலைகளில் மழை நீர் வடிகால் எல்லாம் அமைத்த அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, KASI THEATRE மேம்பாலம் அருகில் இருக்கக்கூடிய அடையாறு ஆற்றங்கரையைக் கடக்கக்கூடிய தரைப்பாலம் கடந்த 2015 ஆம் ஆண்டு பெருவெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. ஆகவே மக்கள் பயன்பெறுவதற்கு அங்கே தரைப்பாலம் மீண்டும் அமைத்துத் தரப்படுமா, புகழ்பெற்ற நம்முடைய பர்மா காலனியில் அமைந்துள்ள அருள்மிகு முனீஸ்வரர் ஆலயத்திற்கு செல்வதற்காக பக்த கோடிகள் எங்கள் தொகுதியிலிருந்து 4 கிலோ மீட்டர் சுற்றிச் செல்கிறார்கள். ஆகவே, தங்கவேல் நகரி

லிருந்து அந்த பர்மா காலனிக்கு தரைப்பாலம் அமைத்துத் தருவார்களா என்று தங்கள் வாயிலாக கேட்டு, அமைகிறேன்.

அமைச்சர் எ.வ. வேலு: நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் எ.எம்.வி. பிரபாகரராஜா ஏற்கெனவே இதுசம்பந்தமாக என்னிடத்திலே கடிதம் கொடுத்திருக்கிறார்கள். எனவே, துறைக்கு அதை அனுப்பியிருக்கிறேன். அதை ஆய்வு மேற்கொள்கிறார்கள். அந்த தரைப்பாலத்தில் மேம்பாலம் அமைப்பதற்கு போதுமான அளவுக்கு போக்குவரத்து செறிவு இருக்குமேயானால் இந்த நிதியாண்டிலேயே அதை எடுத்துக்கொள்வதற்கு அரசு முன்னுரிமை அளிக்கும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

எழும்பூர் தொகுதி, 77 'அ' வட்டத்தைச் சேர்ந்த மாவட்டப் பிரதிநிதி மா.காந்தியின் மைத்துனர் எம்.ஆனந்தன் இயற்கை எய்தியதையடுத்து, கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் அவரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, அவரது உறவினர்களுக்கு ஆறுதல் கூறினார்.

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்குப் பகுதி, 101 (அ) வது வட்ட தி.மு.க. சார்பில் கோடை காலத்தில் மக்கள் தாகம் தீர்க்கும் தண்ணீர் பந்தல் திறப்பு விழா வட்டச் செயலாளர் சி.பி.திருமலை தலைமையில் மெட்டில்டா கோவிந்தராஜ் எம்.சி, க.கோவிந்தராஜ் ஆகியோர் முன்னிலையில் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, மேயர் பிரியா ராஜன், தயாநிதி மாறன் எம்.பி, அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன் ஆகியோர் திறந்து வைத்து, பொதுமக்களுக்கு நீர்மோர், இளநீர், தர்பூசணி, பழங்கள், வெள்ளரிக்காய், பழரசம், ஆகியவற்றை வழங்கினார்கள். இதில் பகுதிச் செயலாளர் ச. பரமசிவம், கார்த்திக் மோகன், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.